# பிரதமரும் - உள்துறை அமைச்சரும் வெளியிட்ட முரண்பட்ட அறிக்கைகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

பயிற்சியை முடக்க அனுமதித்து, அரசியலமைப்பு முன்னதாகவே திருத்தப்பட்டது.

இந்தக் காலம் முடிவடைந்ததும், முடக்கத்தை மேலும் 25 ஆண்டுகளுக்கு, அதாவது 2026 வரை நீட்டித்து 2002 ஆம் ஆண்டு 84 வது திருத்தம் இயற்றப்பட்டது, நாம் அனைவரும் அறிந்தபடி, 2002 இல் செயல்படுத்தப்பட்ட முடக்கம் காலாவதியாக உள்ளது, எனவே 2026 இல் என்ன நடக்கும்?

குறிப்பாக, 2026 க்குப் பிறகு எல்லை நிர்ணயத்தை செயல்படுத்துவதற்கான ஒரு உத்தியாக, கோவிட்19 காரணமாக ஒத்தி வைக்கப்பட்ட 2021 மக்கள் தொகை கணக்கெடுப்பு இன்னும் செய்யப்படவில்லை.

**மக்கள் தொகை கணக்கெடுப்பு!**

2026 க்குப் பிறகு மக்கள் தொகை கணக்கெடுப்புத் தரவை அவர்கள் பயன்படுத்தினால், மக்களவை இட ஒதுக்கீடு வெகுவாக மாறும். இங்குதான் ஆபத்து உள்ளது: அதிக மக்கள் தொகை வளர்ச்சி உள்ள மாநிலங்கள் அதிக இடங்களைப் பெறும், அதே நேரத்தில் எங்களைப் போன்ற மாநிலங்கள் குறிப்பிடத்தக்க அரசியல் பிரதிநிதித்துவத்தை இழப்போம். 2002 இல் விதிக்கப்பட்ட முடக்கம் தொடர்வது குறித்து இதுவரை எந்த அதிகாரப்பூர்வ அறிக்கையையும் வெளியிட ஒன்றிய அரசு தயங்குகிறது.

உண்மையில், எல்லை நிர்ணயம் குறித்து பிரதமரும் உள்துறை அமைச்சரும் முரண்பட்ட அறிக்கைகளை வெளியிட்டு, நிறைய குழப்பங்களை உருவாக்கியுள்ளனர். செப்டம்பர் 2023 இல், ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா நாடாளுமன்றத்தில் எல்லை நிர்ணய செயல்முறை செயல்படுத்தப்படும் என்றும், இடங்கள் அதிகரிக்கப்படும் என்றும் கூறினார்.

**தெலுங்கானாவில் பிரதமரின் பேச்சு!**

இருப்பினும், 2023 இல் தெலுங்கானாவில் நடந்த தேர்தல் பேரணியில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் எல்லை நிர்ணயம் செயல்படுத்தப்பட்டால், தென் மாநிலங்கள் சுமார் 100 இடங்களை இழக்கும் என்று கூறினார். இதற்கிடையில், சமீபத்தில் கோயம்புத்தூருக்கு வருகை தந்த ஒன்றிய உள்துறை அமைச்சர், இந்த எல்லை நிர்ணய நடவடிக்கையால் தமிழ் நாடு பாதிக்கப்படாது என்று கூறினார்.

எனவே, நமக்கு முன்னால் உள்ள கேள்விகள். முடக்கம் நீட்டிக்கப்படுமா இல்லையா? இடங்களின் எண்ணிக்கை அப்படியே இருக்குமா ? அல்லது அதிகரிக்குமா ? அதிகரிக்கப்பட்டால், எண்ணிக்கை என்னவாக இருக்கும்?

எந்த அடிப்படையில், மாநிலங்களுக்கு இடையே இடங்கள் பகிர்ந்தளிக்கப்படும். அது 1971 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி செய்யப்படுமா அல்லது முன்மொழியப்பட்ட 2026 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி செய்யப்படுமா?

**இரண்டு சூழ்நிலைகள் ஏற்பட வாய்ப்பு!**

முடக்கம் நீட்டிக்கப்படாவிட்டால், இரண்டு சூழ்நிலைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

1) தற்போதைய 543 இடங்களை வைத்துக்கொண்டு, 2026 மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் மறுபகிர்வு செய்வதன் மூலம் ஒன்றிய அரசு எல்லை நிர்ணயப் பயிற்சியைச் செய்யும்.

2) மாற்றாக, இடங்களை 848 ஆக அதிகரிக்கலாம், பின்னர் 2026 மக்கள் தொகை கணக்கெடுப்புக்குப் பிறகு பகிர்ந்தளிக்கலாம்.

இரண்டு சந்தர்ப்பங்களிலும், நாம் நமது பிரதிநிதித்துவத்தை கணிசமாக இழப்போம்.

**உதாரணமாக சூழ்நிலை 1:**

தற்போதுள்ள 543 ஐ தக்கவைத்து 2026 ல் திட்டமிடப்பட்ட, மக்கள்தொகையின் அடிப்படையில் மறுபகிர்வு செய்தால், என்ன நடக்கும்? இதை இங்கே சில தரவுகளுடன் விளக்க விரும்புகிறேன். இன்று, இங்குள்ள மாநிலங்கள் நாடாளுமன்றத்தில் 30 சதவீத எம்.பி.க்களை பங்களிக்கின்றன, மக்களவையில் மொத்தம் 543 இடங்களில் மொத்தம் 163 இடங்களை கொண்டு உள்ளன.

எல்லை நிர்ணயம் செயல்படுத்தப்பட்டால், எங்கள் இடங்கள் 163 இலிருந்து 133 ஆகக் குறையும், எங்கள் பிரதிநிதித்துவம் 30 சதவீதத்திலிருந்து 24 சதவீதமாகக் குறையும். எடுத்துக்காட்டாக, கேரளா 8 இடங்களை இழக்கும், இது அவர்களின் தற்போதைய இடங்களில் கிட்டத்தட்ட 40 சதவீதமாகும். மாறாக, சில மாநிலங்களுக்கான இடங்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரிக்கும்.

**சூழ்நிலை: 2 நடந்தால்**

இடங்களின் எண்ணிக்கை 848 ஆக அதிகரிக்கப்பட்டால், எங்களுக்கு என்ன கிடைக்கும்? எங்களுக்கு சில கூடுதல் இடங்கள் கிடைக்கக்கூடும், ஆனால், எங்கள் ஒட்டு மொத்த பிரதிநிதித்துவம் மீண்டும் 30 சதவீதத்திலிருந்து 24.7 சதவீதமாகக் குறையும்.

உதாரணமாக, தமிழ்நாட்டின் நிலையைக் கவனியுங்கள். 1971 மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் 848 இடங்கள் மறுபகிர்வு செய்யப்பட்டால், எங்களுக்கு 61 இடங்கள் கிடைக்க வேண்டும். இருப்பினும், 2026 ஆம் ஆண்டு எதிர்பார்க்கப்பட்ட மக்கள்தொகையின்படி, எங்களுக்கு 49 இடங்கள் மட்டுமே கிடைக்கும்.

தமிழ்நாடு மட்டும் சுமார் 12 இடங்களை இழக்கும், கேரளா சுமார் 11 இடங்களை இழக்கும், ஆந்திரா மற்றும் தெலுங்கானா இணைந்து சுமார் 11 இடங்களை இழக்கும், மேலும் இங்கு இருக்கும் 7 மாநிலங்கள் ஒரு அணியாக மொத்தம் 44 இடங்களை இழக்கும்.

எனவே, இங்குள்ள சாத்தியமான அச்சுறுத்தல்கள் என்ன? எல்லை நிர்ணயம் சில மாநிலங்களுக்கான பிரதிநிதித்துவத்தை நியாயமற்ற முறையில் அதிகரிக்கும், அதே நேரத்தில் நமது தற்போதைய பிரதிநிதித்துவத்தைக் குறைத்து, உத்தரபிரதேசம், ராஜஸ்தான், பீகார் மற்றும் மத்தியப் பிரதேசம் போன்ற சில மாநிலங்களுக்கு தேவையற்ற நன்மையை அளிக்கும்.

இங்குள்ள 7 மாநிலங்கள் 65 இடங்களைப் பெற உள்ளன, மேலே குறிப்பிடப்பட்ட நான்கு மாநிலங்கள் கூடுதலாக 150 இடங்களைப் பெறும். விவசாயம், தொழில்கள், வேலைவாய்ப்புகள், வட்டாரத்தின் வளர்ச்சி தொடர்பான தேசியக் கொள்கைகள் சில மாநிலங்களால் ஆணையிடப்படலாம், நமது தேவைகள் ஒதுக்கி வைக்கபடலாம்.

ஒன்றிய அரசினை அமைப்பது சில மாநிலங்களால் விகிதாச்சாரமற்ற முறையில் நிர்பந்திக்கப்படும். இது நமது மாநிலங்களின் அரசியல் குரலைக் கணிசமாக பலவீனப்படுத்தும். எனவே, இதை ஒன்றிய அரசின் நியாயமற்ற மற்றும் அநீதியான நடவடிக்கை என்று நாங்கள் கூறுகின்றோம்.

இது வெறும் எண் விளையாட்டு அல்ல இது பாஜக ஆட்சி செய்யாத மாநிலங்கள் மீது தங்கள் பிரதிநிதித்துவத்தைக் குறைக்க திட்டமிட்ட தாக்குதல்.

அதிக பிறப்பு விகிதங்களைக் கொண்ட மாநிலங்களுக்கு அதிக இடங்கள் என்பது, நாடாளுமன்றத்தில் நமது குரல் பலவீனமடைகிறது என்பதாகும். மக்கள் தொகையை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வெற்றி பெற்றதற்காக வெகுமதி அளிக்கப்படாவிட்டாலும், குறைந்தபட்சம் நாம் தண்டிக்கப்படக்கூடாது.

**கூட்டாட்சிக்கு அச்சுறுத்தல்!**

இந்த நடவடிக்கை கூட்டாட்சி அமைப்புக்கு நேரடி அச்சுறுத்தலாகும். எனவே, நாம் விரைவாகச் செயல்பட வேண்டும், மேலும் நாம் ஒன்றாகச் செயல்பட வேண்டும். 1971 மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் மக்களவை இடங்களுக்கான முடக்கத்தை 2026 க்கு பிறகும் நீட்டிக்க வேண்டும் என்று நாம் கோர வேண்டும்.

இடங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டாலும் இல்லாவிட்டாலும். மக்களவையில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் தற்போதைய விகிதாச்சார பிரதிநிதித்துவம் பராமரிக்கப்பட வேண்டும் என்று நாம் வலியுறுத்த வேண்டும்,

இது எந்த ஒரு குறிப்பிட்ட மாநிலத்தைப் குறித்தது மட்டுமல்ல இது இந்தியாவில் ஜனநாயகத்தின் எதிர்காலத்தைப் பற்றியது. எனவே நாம் ஒன்றாக நிற்போம். நமது குரல்களை எழுப்புவோம். நமது பிரதிநிதித்துவத்தைப் பாதுகாக்கும் மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு நீதியை உறுதி செய்யும் நியாயமான எல்லை நிர்ணய செயல்முறைக்காக போராடுவோம்.

இந்த முக்கியத்துவம் வாய்ந்த கூட்டத்தில் பங்கேற்ற உங்கள் அனைவருக்கும் மீண்டும் நன்றி. மேலும், உங்கள் மதிப்புமிக்க கருத்துகள் மற்றும் பரிந்துரைகளை நாங்கள் வரவேற்கின்றோம்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

---

### மிகவும் பின்தங்கிய மாவட்டமான

## கடலூரில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைத்திட அரசு பரிசீலிக்கும்!

### சட்டப்பேரவையில் – அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 25-

சட்டப்பேரவையில் கடலூர் தொகுதி கழக உறுப்பினர் கோ.ஐயப்பன் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் அளித்த பதிலும் வருமாறு:-

**கோ. ஐயப்பன்:** (அ) கடலூரில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன்:** (அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பது குறித்து கடந்த 29-5-2018 அன்று சட்டமன்றப் பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, அம்மாவட்டத்தில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையில், தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அங்கு போதிய சாத்தியக்கூறுகள் இல்லாததால், அத்திட்டம் அராசணை (நிலை) எண் 11, தகவல் தொழில்நுட்பவியல் (B3) துறை, நாள் 20-9-2019-ன்படி கைவிடப்பட்டது. அதாவது இரண்டும் கடந்த ஆட்சியில் கைவிடப்பட்டது. இருப்பினும், கடலூருக்கு அருகில் உள்ள சோழிங்கநல்லூர், ELCOSEZ பூங்காவில் 377 ஏக்கர் நிலப்பரப்பில், ஒரு தகவல் தொழில்நுட்பப் பூங்கா 2005 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அதில் Wipro நிறுவனம் 72 ஏக்கர், HCL Technologies Limited 45 ஏக்கர், Mahindra Private Limited 45 ஏக்கர் Cognizant Technology Solutions India Pvt Ltd 18 ஏக்கர், Ford Motors Pvt Ltd 25 ஏக்கர் மற்றும் Sutherland Global Services 13.5 ஏக்கர் இடத்தில் சுமார் 68,000-க்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

மேலும், வளர்ந்துவரும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த இடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும்வகையில், 2.33 இலட்சம் சதுரடி பரப்பளவில், இதே பூங்காவில் ஒரு புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, விரைவில் திறக்கப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், எதிர்காலத்தில் கடலூர் மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைத்திட தேவை ஏற்படின், சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் அரசு அதனைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கோ. ஐயப்பன்:** கடலூர் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். இந்த மாவட்டத்தில் பல்வேறு பொறியியல் கல்லூரிகளிலும், அரசு கலை அறிவியல் கல்லூரிகளிலும் மாணவ, மாணவியர்கள் பயின்று வருகிறார்கள். அவர்கள் கல்லூரி படிப்பை முடித்தவுடன் வேலைத் தேடி சென்னை, பெங்களூர் போன்ற இடங்களுக்குச் சென்று, ரூ.20 ஆயிரம், ரூ.30 ஆயிரம் என்று மிகவும் குறைவான வருமானத்திலே, அங்கே தங்கி மிகவும் சிரமத்திற்குள்ளாகி பணிபுரிந்து வருகிறார்கள். மாவட்டத்தின் தலைநகரான கடலூர் சட்டமன்றத் தொகுதியில் அரசு அலுவலகங்கள் தவிர படித்து முடித்த இளைஞர்கள் தொழில், வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான எந்தச் சூழலும் இல்லை. கடல்வழி மார்க்கம், தரைவழி மார்க்கம், வான்வழி மார்க்கம் என்று பல்வேறு நிலையிலே அனைத்து வசதிகளும் இருக்கின்றன.

இங்கு நிலத்தடி நீரும், நீர்வளமும் நல்ல நிலையில் இருக்கிறது. படித்த மாணவர்களுக்கு குறைந்த வருமானம் இருந்தாலும்கூட இங்கு பெரிய TIDEL பூங்காக்கள், அமைச்சர் அவர்கள் தெரிவித்ததுபோன்று பெரிய அளவில் இல்லையென்றாலும்கூட சிறிய அளவிலாவது சுமார் 500 மாணவ, மாணவியர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் விதமாக mini TIDEL பூங்காவை அமைத்து மாவட்டத்தின் தலைநகரம் கடலூர் சட்டமன்றத் தொகுதியில் எதுவும் இல்லையென்ற குறையை நிவர்த்தி செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

**அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன்:** இங்குள்ள உறுப்பினர்கள் பலர் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை விடுத்துள்ளதால், ஒரு விளக்கம் அளிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஒன்றிய அரசாங்கத்தில் இந்தத் துறையின் பெயர் MeitY (Ministry of Electronics and Information Technology), ஆந்திராவில், தெலங்கானாவில், கேரளாவில் அதே போன்று Department of Electronics and Information Technology, கர்நாடகாவில் Department of Electronics, Information Technology, Biotechnology, and Science & Technology (E, IT, BT & S&T) எனவே அனைத்து துறைகளும் உள்ளடக்கியதாக இருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டில் முதலில் TIDEL துவக்கும்போது, தலைவர் கலைஞர் அதற்கு துறை அமைச்சராக இருந்து ELCOT மூலம் துவக்கப்பட்டதே தவிர, இன்றைக்கு தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் ELCOSEZ மட்டும்தான் தகவல் தொழில்நுட்பத் துறையில் இருக்கிறது. மீதமுள்ள, TIDEL, Neo TIDEL (TIDEL Neo) தகவல் தொழில்நுட்பம் ஈர்ப்பு, அதற்கு சலுகை எல்லாமே தொழில்துறையில் இருக்கிறது. எனவே, சரியான இடத்தில் கேட்டால், கையில் நிறைய வைத்திருக்கிறார்கள். கொடுப்பார்கள் என்று நினைக்கிறேன். அந்தந்தத் துறையில் கேட்டால், அந்தந்த வகையில் வரும். இந்தத் துறையில் அந்த உரிமைகள் இல்லை என்பதைத் தெளிவாகக் கூறிக் கொள்கிறேன்.

**கோ. ஐயப்பன்:** 2006-ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டது முதல் நான் இந்த கோரிக்கையை வலியுறுத்திக் கொண்டிருக்கின்றேன். கடலூர் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். இது குறித்து, முதலமைச்சர் அவர்களுடைய அனுமதி பெற்று, மாவட்டத் தலைநகரமாக இருக்கின்ற கடலூர் சட்டமன்ற தொகுதியிலே, ஆங்கிலேயர் காலத்திலிருந்து இராபர்ட் கிளைவ் அவர்கள் இந்தக் கடலூரை தலைநகரமாகக் கொண்டு செயல்பட்டார்கள் என்ற நிலைகளோடு, கடலூரிலே எந்தவிதமான தொழிற்சாலைகள், தொழில் பூங்காக்களும் சட்டமன்ற தொகுதியில் இல்லை. அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் நிறைய இருக்கின்ற காரணத்தால், கடலூரில் பயில்கின்ற மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில், ஏழை மாணவர்களுக்கு உதவிடும் வகையில் கடலூர் சட்டமன்ற தொகுதியிலே ஒரு சிறிய அளவிலாவது தொழிற் பூங்காக்களை அமைப்பதற்கு மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன்:** என் துறையில் இல்லாத அதிகாரமோ, இல்லை திட்டமோ என்னால் செயல்படுத்த முடியாது என்பதனால் உறுப்பினரிடம் நான் கூற வேண்டியது அவருடைய கோரிக்கை நியாயமான கோரிக்கை. அனுதாபம் எனக்கு இருக்கிறது. ஆனால் எந்தத் துறையால் இதை செயல்படுத்த முடியுமோ அந்தத் துறையில் அவர் கோரிக்கை வைத்தால், அருமை அண்ணன், இங்கே வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் கேட்டிருக்கிறார்கள், அவர் மாவட்டத்திற்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். தொழில் துறை அமைச்சர் அவர்கள் எல்லாம் செய்து கொடுப்பார் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

திருப்பூர் மாவட்டம், மூலனூர் ஒன்றியம், பொன்னிவாடி ஊராட்சி எல்லப்பாளையத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுநிதி 2024–2025, ஊராட்சி ஒன்றிய பொதுநிதி 2024–2025 கீழ் ரூ.11,00,000 மதிப்பீட்டில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணியினை திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டல தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் துவக்கி வைத்தார். இதில் ஒன்றிய செயலாளர் துரை தமிழரசு, மூலனூர் ஒன்றிய முன்னாள் பெருந்தலைவர் சுமதி கார்த்திக், சட்டமன்ற தொகுதி பார்வையாளர் கணேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

---

### பெண்களுக்கு வேலைவாய்ப்பையும் பாதுகாப்பையும் உறுதிசெய்யும் அரசு திராவிட மாடல் அரசு!

## இந்திய அளவில் பணிபுரியும் பெண்களில் 41 சதவிகிதம் தமிழ்நாட்டினர்!

### சட்டப் பேரவையில் – தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பெருமிதம்!

சென்னை, மார்ச் 25-

சட்டப் பேரவையில், நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தில் அ.தி.மு.க. உறுப்பினர் தங்கமணி கலந்து கொண்டு பேசுகையில் குறுக்கிட்டு விளக்கமளித்த தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, "இந்திய அளவில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களில் 41 சதவிகிதப் பெண்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்!" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

சட்டப் பேரவையில் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பேசியதாவது:-

எங்குமே வேலைவாய்ப்பு கிடைக்கவில்லை என்று சொல்வதுபோல் இருந்தது. (குறுக்கீடு) குறைவாக இருக்கிறது, இன்னும் கொஞ்சம் கூடுதலாக செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். திராவிட நாயகன் அவர்கள் ஆட்சியில்தான் தமிழகத்தின் அனைத்து பகுதிகளுக்கும் பரவலாக்கப்பட்ட வளர்ச்சி உறுதி செய்யப்பட்டு, குறிப்பாக தாய்மார்களுக்கு அனைத்து பகுதிகளிலும் வேலைவாய்ப்பு, அவர வர்களது இல்லத்திற்கு அருகாமையிலேயே வேலைவாய்ப்பை உருவாக்கும் அந்தப் பணியை, உறுப்பினர் சொல்கின்ற அந்த காரணத்தையெல்லாம் ஒழிக்க வேண்டும் என்பதற்காகத்தான், நேரடியாக அவர்களுக்கு வேலை வாய்ப்பைக் கொடுக்கும் அந்தப் பணியை திராவிட நாயகன் அவர்கள் கொடுத்திருக்கிறார்.

Welfare measures மட்டுமல்ல, jobsயையும் உறுதிசெய்கிற திராவிட நாயகன் அவர்களின் ஆட்சி இருக்கிறது. தொடர்ந்து இந்தப் பணியை இன்னும் அதிகமாக செய்யும். அதேபோல், வேலைக்கு செல்லும் பெண்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் விதமாகத்தான் தோழி விடுதிகள், அதேபோல ஆங்காங்கே வேலைக்கு செல்லும் பெண்களுக்கு தற்போது விடியல் ஒரு திட்டம் மூலமாக மிகப் பெரிய அடுக்குமாடிக் கட்டடங்களை வழங்கி, அங்கேயே அந்தப் பெண்கள் தங்கி வேலை செய்யும் வேலையெல்லாம் திராவிட நாயகன் அவர்களது அரசு செய்து கொண்டு வருகிறது. எனவே, பெண்களுக்கு வேலைவாய்ப்பு, பாதுகாப்பு இரண்டையும் உறுதிசெய்யும் ஒரு மாபெரும் அரசாக திராவிட நாயகன் அவர்களின் அரசு திகழ்ந்து வருகிறது.

ஒரேயொரு கூடுதல் தகவல். பெண்களுக்கு படிப்பை வழங்கி, வேலைவாய்ப்பை வழங்கி, இப்படிப்பட்ட திட்டங்களையெல்லாம் திராவிட மாடல் அரசு பெண்களுக்காக செயல்படுத்துவதால்தான், தற்போது இந்திய அளவில் பணிபுரியும் பெண்களில், Factoriesல் பணிபுரியும் பெண்களில் 41 சதவிகிதத்தினர் ஒரே மாநிலத்தில் இருக்கின்றனர். அது தமிழ்நாட்டில்தான் என்பதையும் கூடுதல் தகவலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா விளக்கமளித்தார்.

---

### ஆற்காடு தொகுதி – எசையனூர் – பென்னாகர் – வரகுர் – சம்மசமுத்திரம் –

## நஞ்சுகொண்டாபுரம் ஊராட்சிகளில் கால்நடை கிளை நிலையம் அமைத்திடுக!

### சட்டப்பேரவையில் - ஜெ.எல்.ஈஸ்வரப்பன் வலியுறுத்தல்!

சென்னை, மார்ச் 25-

சட்டப்பேரவையில் ஆற்காடு தொகுதி கழக உறுப்பினர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எழுப்பிய கேள்வியும், அமைச்சர் அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன் அளித்த பதிலும் வருமாறு:-

**ஜெ.எல். ஈஸ்வரப்பன்:** ஆற்காடு தொகுதியில் 5,000 க்கும் மேற்பட்ட கால்நடை அலகுகள் உள்ளதாலும், 4 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு வேறு கால்நடை கிளைநிலையங்கள் இல்லாத காரணத்தினால் ஆற்காடு ஒன்றியம், எசையனூர் ஊராட்சியிலும், திமிரி ஒன்றியம், பென்னாகர், கனியனூர், வரகுர் ஊராட்சிகளிலும், கணியம்பாடி ஒன்றியம், சம்மசமுத்திரம், நஞ்சுகொண்டாபுரம் ஊராட்சியிலும் கால்நடை கிளைநிலையம் அமைக்க அரசின் சாத்தியக்கூறுகள் உள்ள காரணத்தினால், அமைச்சர் அவர்கள் அங்கு கால்நடை கிளைநிலையம் அமைக்க முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, அதிகளவில் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள், கால்நடை வளர்ப்போர் ஆகியோரிடமிருந்து புதிய கால்நடை கிளை நிலையங்களுக்கான கோரிக்கைகள் மிகுந்த எதிர்பார்ப்புடன் வந்தவண்ணமாக உள்ளன. சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கால்நடை கிளை நிலையங்கள் அமைக்கப்படுமா என்று கேட்டார்கள். அந்தப் பகுதியின் தேவைகளின் அடிப்படையில், நிதி நிலைக்கேற்றார்போல், கால்நடை நிலையங்கள் மற்றும் கிளைநிலையங்கள் அமைப்பது குறித்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டு சென்று, நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.

நவ இந்தியா, இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் இணைந்து நடத்திய மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமினை தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தொடங்கி வைத்து, தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன் கணபதி ராஜ்குமார் எம்.பி, மாவட்ட ஆட்சியர் பவன்குமார், மாநகராட்சி ஆணையாளர் சிவகுருபிரபாகரன், நா.கார்த்திக், தொ.அ.ரவி தளபதி முருகேசன் மேயர் ரங்கநாயகி, துணை மேயர் வெற்றிசெல்வன், இலக்குமி, இளஞ்செல்வி, மீனாலோகு, கீதா அம்பிகா மற்றும் ஏர்போர்ட் ராஜேந்தர் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.